ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1739/5 - 2012 ජනවාරි 02 වැනි සඳුදා - 2012.01.02

*1739/5 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## *மாகாண சபை அறிவித்தல்கள்*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 185 ஆம் பிரிவின் கீழ் நடாத்தப்படுகின்ற விசாரணை*

வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் முதலமைச்சரும் உள்ளூராட்சி மன்ற விடயப் பொறுப்புடைய அமைச்சருமான விஜேசிங்ஹ ஹெட்டி அச்சி முதியன்சேலாகே அதுல சரத் குமார விஜேசிங்ஹ ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 185 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு ஒழுங்கமைய எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி மஹவ பிரதேச சபையின் தலைவராக இருக்கையில் மேற்கூறப்பட்ட சட்டத்தில் 185 ஆம் பிரிவின் கீழ் காணப்படுகின்ற குற்றங்கள் புரிந்துள்ளாரா என்பதை பரிசீலித்து 3 மாதங்களுள் அறிக்கையை சமர்ப்பிக்கும் வகையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1720/7 ஆம் இலக்க 2011, ஒகத்து மாதம் 24 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானியினால் நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் ஓ. டபிள்யூ. ஓ. பீ. வீரசேன அவர்களினால் அமைக்கப்பட்ட தனியாள் பரிசீலனை ஆணைக்குழுவின் காலம் 2012, மாச்சு மாதம் 15 ஆந் திகதி வரை இத்துடன் நீடிக்கப்படுவதாக இத்தால் அறிவித்தல் விடுக்கின்றேன்.

அதுல சரத் குமார விஜேசிங்ஹ,<br>
வடமேல் மகாணத்தின் முதலமைச்சரும் நிதி மற்றும்<br>
திட்டமிடல், நீதி, சமாதானம், உள்ளூராட்சி மற்றும்<br>
மாகாண நிர்வாக, மனிதவள, கல்வியும் கலாசார நடவடிக்கையும்,<br>
காணி, சூழல், சுற்றுலா, முதலீடு, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும்<br>
உணவு வழங்கல் விடயப் பொறுப்புடைய அமைச்சரும்.

முதலமைச்சு,<br>
குருநாகல்,<br>
2012, சனவரி 02.

*1- 397*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.